பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 08 | சனிக்கிழமை | 25.11.2023 | அதிர்வு 116

## தந்தையும், மகனும் ஆற்றில் மூழ்கிப் பலி

ஆற்றில் மீன் பிடிக்கச் சென்ற தந்தையும் மகனும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கல்கமுவ பிரதேசத்திலுள்ள சியம்பலான்கமுவ பகுதியில் இடம்பெற்றுள்ளது என்று 06

# கொக்குத்தொடுவாய் புதைகுழி வீதியின் ஊடாகப் பரந்து செல்லும் சாத்தியக்கூறு

## விசேட ஸ்கானர் மூலம் பரிசோதனை
## நேற்றும் 4 மனித எலும்புக்கூடுகள் மீட்பு




(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி வீதியின் ஊடாகவும், ஏனைய பகுதிகள் ஊடாகவும் செல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்று முல்லைத்தீவு மாவட்ட விசேட சட்ட வைத்திய அதிகாரி கனக சபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் அகழ்வுப் பணி நேற்றும் முன்னெடுக்கப்பட்டது. நேற்றைய அகழ்வுப் பணி நிறைவடைந்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் 07

# பொலிஸ் அராஜகத்துக்கு உடனே முடிவு கட்டுங்கள்

## ஜனாதிபதியிடம் எதிர்க்கட்சி வலியுறுத்து



"வடக்கு உட்பட நாட்டின் பல இடங்களில் பொலிஸாரின் அராஜகம் தொடர்ந்து வருகின்றது. அவர்களால் சந்தேகநபர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டு வருகின்றார்கள். இதற்கு எதிராக ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்."

- இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. வலியுறுத்தினார். 06

# நினைவேந்தும் உரித்தை நிலைநாட்டத் துணை செய்யுங்கள்

## சிங்கள இளையோர்களிடம் சிறீதரன் எம்.பி. வேண்டுகோள்



(எஸ்.நிதர்ஷன்)

ஈழத்தமிழர்களின் நெடுங்கால மரபுகளின்வழி இம்முறையும், இனிவரும் காலங்களிலும் எமது உறவுகள் புதைக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று விளக்கேற்றி, மலர்தூவி, கண்ணீர் சிந்தி, வழிபடுவதன் மூலம் எங்களைத் நாங்களே ஆற்றுப்படுத்திக் கொள்கின்ற நினைவேந்தல் நிகழ்வுகளை, இராணுவத் தலைமையீடுகளோ, பொலிஸாரின் அச்சுறுத்தல்களோ அற்று அமைதியான வழியில் கடைப்பிடிப்பதற்கு வழிவகை செய்வதன் மூலம் இந்த நாட்டில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முன்வாருங்கள் என்று சிங்கள இளையோரை முன்னிறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று 07

## டக்ளஸைக் கொலை செய்ய முயற்சி:

# மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ள பெண்ணை மன்னிப்பில் விடுவியுங்கள்

## ஜனாதிபதியிடம் குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை



மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ள இரண்டு பிள்ளைகளின் தாயான செ.சத்திய லீலாவை விடுதலை செய்வதற்குரிய பொது மன்னிப்பைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துதவுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவிடம் குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. 06




இன்று என் வாசகர்களுக்கு ஒரு தொழில்நுட்ப விவகாரத்தைப் பற்றிய தகவல்தான் அவர்கள் சிந்தனைக்கு. குறிப்பாக ஸ்மார்ட் போன் மூலம் தங்கள் கொடுப்பனவுகளை – வங்கி விடயங்களை – கையாளும் நண்பர்களுக்கு இந்தத் தகவல் சமர்ப்பணம்.

அவர் ஹைதராபாத்தில் ஒரு நிறுவனத்தின் சிரேஷ்ட நிறைவேற்றதிகாரி. அவருக்கு நவீன தொழில்நுட்ப 06

# திலீபனின் நினைவிடத்திற்கு அருகே நேற்று நினைவேந்தலைக் குழப்பும் விளம்பர நிகழ்வு








மாவீரர் வார நினைவேந்தலில் குழப்பம் ஏற்படுத்தும் வகையில் யாழ்ப்பாணம் நல்லூர் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திற்கு அருகே தென்னிலங்கை நிறுவனமொன்றின் ஏற்பாட்டில் விளம்பர நிகழ்வு ஒன்று நேற்று இரவு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிரை தியாகம் செய்த போராளிகளை நினைவு கூரும் மாவீரர் வாரம் தற்போது அனுஷ்டிக்கப்படு வருவதுடன் தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்திற்கு முன்பாக அமைக்கப்பட்ட மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மண்டபமொன்று திறந்து வைக்கப்பட்டதுடன் பலரும் நாளாந்தம் அதனைப் பார்வையிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திற்கு அருகே தென்னிலங்கையைச் சேர்ந்த டிபி எடியுகேசன் (DP EDUCATION) என்ற தனியார் அறக்கட்டளை நிறுவனத்தின் விளம்பர வாகனமொன்று வந்ததுடன் அங்கு பாடல்களை சத்தமாக ஒலிக்கவிட்டு நிறுவனம் தொடர்பான பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனையடுத்து அங்கு சென்ற சிலர் நினைவேந்தல் நடைபெறுவதாகவும் பாடலை சத்தமாக ஒலிபரப்ப வேண்டாம் எனவும் கூற பாடல் நிறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் சிறிது நேரத்தில் அங்கு வந்திருந்த பெரும்பான்மை இனத்தவர்கள் மிகவும் சத்தமாக சிங்கள மொழி பாடல்களை ஒலிக்க விட்டு ஆடினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதாக கூறிய டிபி எடியுகேசன் (DPEDUCATION) என்றதனியார் அறக்கட்டளை நிறுவனம், மாவீரர் வாரம் தற்போது அனுஷ்டிக்கப்படு வருகிற நிலையில் அதனை குழப்பும் விதத்தில் செயற்பட்டதாக அங்கிருந்தவர்கள் விசனம் தெரிவித்தனர்.

எதிர்ப்பு வலுக்கவே அந்த நிறுவனத்தினர் வாகனத்தை அங்கிருந்து நகர்த்தி சென்றுள்ளனர்.

நவம்பர் 24 முதல் 26 வரை யாழ்ப்பாணத்தில் நிகழ்ச்சி ஒன்றை மேற்கொள்ளவே இந்தக் குழுவினர் யாழ்ப்பாணத்துக்கக வருகை தந்தனர் என அறியமுடிகிறது.

# நிகழ்நிலை காப்பு, ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் சட்டமூலங்கள் சர்வதேச தரங்களுடன் இல்லை

## ஐ.நா. விசேட பிரதிநிதிகள் மூவரால் அறிக்கை

ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலம் மற்றும் உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலம் என்பன தொடர்பில் அதீத கவனம் செலுத்தப்பட்டு ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதிகள் மூவரால் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த இரு சட்டமூலங்களும் சர்வதேச தரங்கள் மற்றும் சட்டத்திற்கு இணங்கவில்லை என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் கருத்து வெளியிடுவதற்கான சுதந்திரத்தின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்கான விசேட பிரதிநிதி இரேனே கான், அமைதியான முறையில் ஒன்றுகூடுதல் மற்றும் செயற்படுதலுக்கான உரிமைகளை பாதுகாப்பதற்கான விசேட பிரதிநிதி கிளமெண்ட் நைலெட்சோஸ்லி வயல் மற்றும் தனியார் உரிமைகள் தொடர்பான விசேட பிரதிநிதி அனா பிரையன் நௌக்ரேர்ஸ் ஆகியோரால் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் தொடர்பிலான உலகளாவிய பிரகடனம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனத்தினால் பாதுகாக்கப்பட்ட தனிநபருக்கான உரிமைகள், கருத்து வெளியிடுவதற்கு காணப்படும் உரிமை மற்றும் அமைதியாக ஒன்றுகூடுதலுக்கான உரிமை என்பன இந்த இரண்டு சட்டமூலங்களாலும் மீறப்படுகின்றன என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட இரு உலகளாவிய பிரகடனங்களிலும் இலங்கை கைச்சாத்திட்டுள்ளதாக ஐ.நா விசேட பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தில் கூறப்பட்டுள்ள பல விடயங்கள், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான உலகளாவிய பிரடனங்களின் மூலம் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை நிறைவேற்றவில்லை எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

உத்தேச சட்டமூலங்களின் ஊடாக நிகழ்நிலையில் கருத்து வெளியிடுவதற்கான உரிமை மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதுடன், கடுமையாக அரசாங்கத்தை விமர்சிக்கும் ஊடகவியலாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்களுக்கு எதிராக தடைகளும் அச்சுறுத்தல்களும் விடுக்கப்படக்கூடும் என ஐ.நா விசேட பிரதிநிதிகளின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் வாழும் அனைத்து தரப்பினர் மற்றும் புலம்பெயர் தமிழர்களை இலக்கு வைத்து இந்த சட்டமூலங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன எனவும் அவை வெவ்வேறு துறைகளை சேர்ந்தோர் கருத்து வெளியிடுவதற்கு காணப்படும் உரிமை மீது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேச ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் சட்டமூலத்திற்கமைய ஆணைக்குழுவை நியமிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால், அரசாங்கம் தொடர்பில் பக்கசார்பற்ற முறையில் செயற்படும் ஊடக நிறுவனங்களை தண்டிக்கவோ அல்லது உரிமத்தை இரத்து செய்யவோ நாட்டின் நிர்வாக அதிகாரிகளுக்கு வாய்ப்பு கிடைக்குமென ஐ.நா விசேட பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தக் கண்காணிப்புச் செயற்பாடு சுதந்திரமான மற்றும் அழுத்தங்களுக்கு உட்படாத அமைப்பாக இருக்க வேண்டும் எனவும் அதில் அரசியல் தொடர்புகள் இருக்கக்கூடாது எனவும் அவர்கள் தமது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த இரு சட்டமூலங்களையும் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது பொதுமக்களின் கருத்தைக் கேட்டறிந்த பின்னர் முறையாக மறுபரிசீலனை செய்ய வேண்டுமென ஐ.நா. விசேட பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023

"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி



ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்

கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்



AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT A/C
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230

# RUHBINS HOSPITAL (PVT) LTD.

NO. 160, POINT PEDRO ROAD, NELLIYADY, JAFFNA.

## NOVEMBER 14

# WORLD DIABETES DAY

# DIABETES IS A SILENT KILLER

Approximately 463 M + From the World Population

Over 2 M Sri Lankans are Diabetes

Every 6 seconds One person dies due to Diabetes



## Access to Diabetes Care

### WELLNESS PACKAGE

- HBA1C
- Fasing/ Random Blood Sugar
- Total Cholesterol
- Creatinine & eGFR
- Blood Pressure
- BMI Assessment
- Consultation with Medical Officer
- Advice on Lifestyle Modification

**Special Offer**

**Rs. 5,500/-**

Offer valid till Dec 14th

Hotline: +94772486642

உங்கள் அன்பிற்குரியவரை நீரிழிவு பரிசோதனை செய்துகோள்ள சொல்லுங்கள், அது அவர்களின் உயிரை பாதுகாக்கும்.

Ruhbins Hospital

No. 160, Pointpedro Road, Nelliyadi, Jaffna

# விஷப் பாம்பு தீண்டியதால் ஆறு மாதக் குழந்தை சாவு

விஷப் பாம்பு தீண்டியதால் ஆறு மாத குழந்தை ஒன்று பரிதாபகரமான முறையில் பலியான சம்பவம் இன்று அதிகாலை மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஒல்லிக்குளம் பற்றிமாபுரத்தில் இடம்பெற்றது.

பாத்திமா புரத்தில் உள்ள தனது வீட்டில் வெற்றுத்தரையில் தூங்கிக் கொண்டிருந்த ஆறு மாத குழந்தையை பாம்பு பல இடங்களில் தீண்டியுள்ளதால் மரணம் ஏற்பட்டிருப்பதாக திடீர் மரண விசாரணை அதிகாரியின் பிரேத பரிசோதனைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

தாயின் அருகே தூங்கிக் கொண்டிருந்த குழந்தையை இன்று அதிகாலை மூன்று முப்பது மணி அளவில் பாம்பு தீண்டி இருக்கிறது. தாய் காலை 7 மணி அளவில் மயக்க நிலையில் இருந்த குழந்தையை ஆரையம்பதி வைத்தியசாலையில் அனுமதித்தார் .

குழந்தை உயிரிழந்த நிலையிலேயேமட்டக்களப்புபோதனாவைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனையின் பின்னர் குழந்தை உடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இக்னேஷ் அபிலாஷ் என்னும் 6 மாத ஆண் குழந்தையே இவ்வாறு பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளது.

வீட்டின் அருகில் இருந்த காடுகளுக்குள் இருந்தே மேற்படி பாம்பு வீட்டினுள் நுழைந்து குழந்தையை தீண்டியிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குழந்தையைத் தீண்டிய பாம்பை அயலவர்கள் அடித்துக் கொன்றுள்ளனர். இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விடயங்கள் அத்துபடி.

திடீரென அவரது வங்கிக் கணக்கில் இருந்து ஒன்லைன் மூலம் இந்தியப் பணத்தில் 16 லட்சம் ரூபாய் காணாமல் போனது.

தனது ஸ்மார்ட்போன் மூலம் எந்த வங்கிக் கணக்கு விடயங்களையும் அவர் வெளியில் கையாண்டிருக்கவில்லை. போன் மூலம் யாருடனும் பணம் கொடுக்கல் – வாங்கலை அவர் மேற்கொள்ள வில்லை.

அவருக்கு தெரியாமலேயே அவரது தொலைபேசி ஊடாக பணம் சூறையாடப் பட்டிருக்கின்றது.

**எங்ஙனம் இது சாத்தியம்?**

சைபர் குற்றப்பிரிவு புலன் விசாரணை யாளர்கள் தலையைப் பிய்த்துக் கொண் டதுதான் மிச்சம். பணம் எப்படி வங்கிக் கணக்கில் இருந்து வெளியேறியது அல்லது வெளியேற்றப்பட்டது என்று தெரியாமல் நிபுணர்கள் தமது தலையை முட்டி மோதிக்கொண்டனர்.

கடைசியாக அவரது அலுவலகத்தில் இருந்த சிசிடிவி கமராவின் பதிவு உண் மையை அம்பலமாக்கியது. மேற்படி நிறுவன சிரேஷ்ட நிர்வாக அதிகாரியின் மொபைல் போனின் சார்ஜரை சிசிடிவி கமராவின் பதிவுகளில் துருவித் துருவி ஆராய்ந்தனர்.

அவர் வழமையாக பயன்படுத்தும் மொபைல் போன் சார்ஜரை அலுவலகத் தில் அதற்குரிய பிளக்கில் மாட்டியிருப் பார். தேவையான சமயங்களில் சார்ஜ் போடுவார். மற்றபடி சார்ஜர் அதிலேயே விடப்பட்டிருக்கும்.

அந்த சார்ஜரை சிசிடிவி கமரா பதிவில் நோக்கும் போது ஒரே ஒரு நாள் மட்டும் அவரது வழமையான சார்ஜரை அப்படியே தோற்றத்தில் ஒத்த புதிய சார்ஜர் அந்த பிளக்கில் மாட்டி இருந்தது தெரிய வந்தது. இடையில் வந்த சார்ஜரில்தான் மேற்படி நிறைவேற்றதிகாரியின் ஸ்மார்ட் போனில் இருக்கும் விடயங்களை திருடும் நுணுக் கமான பொறிமுறைக் கருவி பொருத் தப்பட்டிருந்தது. அது தெரியாமல் அந் தச் சார்ஜரில் தனது ஸ்மார்ட்போனை அவர் சொருக அந்த சார்ஜரில் இருந்த நுணுக்கமான கருவி தன் கைவரி சையைக் காட்டிவிட்டது.

ஆகவே ஸ்மார்ட்போன்களை சார ஜரில் போடுபவர்கள் சற்று அவதானமாக இருப்பது நல்லது.

இந்த விடயத்தை வெளிநாட்டில் வசிக் கும் என் நண்பர் ஒருவனுக்குச் சொன் னேன். அவன் சிரித்துக் கொண்டே பதில் சொன்னான்.

“இது எனக்கும், உனக்கும் பிரச்சினை தரும் விடயம் அல்ல” என்றான் என் நண்பன்.

ஏன் அப்படி கூறுகிறான் என்று வினாவினேன்.

“ஏனென்றால் எனக்கும் உனக்கும் தான் வங்கியில் பணம் இல்லையே, மற்றொருவர் சுற்றுவதற்கு....” என்றான் அந்த நண்பன்.

வாஸ்தவம்தான்..... ‘மடியில் கனமி ருந்தால்தானே வழியில் பயம்? எங்களி டம்தான் மடியில் கனமில்லையே’ .. பிற கேன் வழியில் பயம்...?’

## மரண தண்டனையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதிக்கான குறித்த கோரிக்கை கடிதத்தை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முற்பகல் குரலற்றவர்களின் குரல் அமைப்பினரலால் நேரில் கையளிக்கப்பட்டுள்ளது.

ஆளுநரின் சார்பில் ஆளுநர் செயலக மக்கள் தொடர்பு அதிகாரி அந்தக் கோரிக்கை கடிதத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடிதத்தின் பிரதிகள் வடக்கு – கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று குரலற்றவர்களின் குரல் அமைப் பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு அனுப்பிய கோரிக்கை கடிதம் வருமாறு:-

14ஆண்டுகளாக சிறைவாசம் அனுபவித்து விடுதலையான பின்பு, மரண தண்டணையை எதிர்நோக்கியுள்ள இரண்டு பிள்ளைகளின் தாயான தமிழ் அரசியல் கைதி தொடர்பானது.

மேற்படி, இல.6ஃ3, கண்ணாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரியை வாழ்விடமாகக் கொண்ட இரண்டு பிள் ளைகளின் தாயான செ.சத்தியலீலா என்பவர் 14 ஆண்டு காலம் தமிழ் அரசி யல் கைதியாக வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கொழும்பு மேல்நீதிமன்றத்தினூடாக விடுவிக்கப்பட்டிருந்தார். எனினும், சட் டமா அதிபர் திணைக்களத்தின் மேல் முறையீடு காரணமாக இப்பெண்மணி மீண்டும் மரணதண்டணையை எதிர் நோக்கியுள்ளார்.

அதாவது, 2004ஆம் ஆண்டு இடம் பெற்ற, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீதான குண்டுத் தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தின் பெயரில் முன்பள்ளி ஆசிரியையானகுடும்பத்தலைவிசெ.சத்தியலீலா என்பவர் அவசரகாலச் சட்டவிதியின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார். இவர், சுமார் 14 ஆண்டுகள் இருந்தபடி நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு முகம் கொடுத்து கடந்த ஜனவரி 14, 2018 அன்று கொழும்பு மேல் நீதி மன்றினால் “15வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டாண்டு கடூழிய சிறைத்தண்டணையுடன் சேர்த்து 25 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் செலுத்த வேண்டும்.” என்கின்ற நிபந் தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், மேல்நீதிமன்றம் வழங்கிய இவ்வழக்குத் தீர்ப்பில் திருப் தியுறாத சட்டமா அதிபர் அதனை ஆட்சே பித்து மேல்முறையீட்டு நீதிமன்றத் தில் மேல்முறையீடு செய்திருந்தார். அதற்கமைய மேல்முறையீட்டு நீதிமன் றம் செ.சத்தியலீலா என்பவருக்கு ஜனவரி 23, 2023 அன்று மரணதண்டணை தீர்ப்பளித்துள்ளது. நிரந்தர வருமான மின்மையால் வறுமையின் கோரப்பி டிக்குள் சிக்கித் தவிக்கும் சத்தியலீலா வால் தனக்கென ஒரு சட்டத்தரணியை அமர்த்துவதில் கூட மிகச்சிரமப்படுகிறார்.

இவ்வாறான நிலையில்தான் இவர், இறுதி முயற்சியாக இலங்கை உயர் நீதிமன்றத்தின் வாசலை ஏகியிருக்கி றார். ஜனாதிபதியாகிய தாங்கள், சமூகங் களுக்கிடையிலான நல்லெண்ண சமிக் கையாக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை உட்பட இன்னபிற விடயங்களி லும் கரிசனைகொள்வதாக நம்பப்படுகின் றது.

இதேநேரம், அரச இயந்திரங்க ளின் செயற்பாடுகளோமுற்றிலும் மாறாக இருப்பது கவலையளிக்கின்றது. இவ்வ ழக்குடன் சம்பந்தபட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சந்தேகநபரான “செ.சத்தி யலீலாவை வழக்கிலிருந்து விடுவிப்பது தொடர்பில் எனக்கு எவ்வித ஆட்சேபனை யும் இல்லை” என்று, திறந்த மேல் நீதி மன்றத்தில் வெளிப்படையாக தெரிவித் திருந்த நிலையிலும் கூட இப்பெண்மணி இன்று சாவுத் தண்டணைக்கு ஆளாக் கப்பட்டுள்ளார்.

ஆகவே, “14 வருடங்களாகக் குடும் பம், பிள்ளைகள், பெற்றோர், உறவுகள் என அனைவரையும் பிரிந்து சிறைக் குள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துவிட்டு விடுதலையாகி வெளி யில் வந்த பின்பும் ஒரு மரணதண்டணை கைதியாக மீண்டும் சிறை செல்வதை என்னால் நினைத்துப் பார்க்க முடியாது. அதற்கு, உயிரை மாய்த்துக் கொள்வதே மேல்” என்ற நிலைப்பாட்டில் இருக்கும் இந்த பெண்மணிக்கு ஏதேனுமோர் அரசியல் தீர்மானத்தின் அடிப்படையில் பொது மன்னிப்பைப் பெற்றுக்கொடுப் பதற்கு நடவடிக்கை எடுத்துதவுமாறு ஜனாதிபதியை, ஒரு சுயாதீன மனிதநேய அமைப்பாக நாம் கேட்டு நிற்கின்றோம். – என்றுள்ளது.

## தந்தையும் மகனும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய தந்தையும், 20 வயது டைய மகனுமே இவ்வாறு உயிரிழந்துள் ளனர்.

இவர்கள் இருவரும் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, தந்தை ஆற் றில் தவறி வீழ்ந்து நீரில் மூழ்கினார் எனவும், அவரைக் காப்பாற்றுவதற்கு ஆற்றில் குதித்த மகனும் நீரில் மூழ்கி னார் எனவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை கல்கமுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பொலிஸ் அராஜகத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மக்களின் பாதுகாவலர்களாக இருக்க வேண்டிய பொலிஸார் தொடர்ந்தும் அராஜகம் புரிந்து வருகின்றனர். அவர்க ளால் மக்கள் பிரதிநிதிகளுக்குக் கூட அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. சந்தேக நபர்களைக் கொடூர சித்திரவதைகள் மூலம் அவர்கள் கொலை செய்து வரு கின்றனர். அண்மையில் கூட யாழ்ப்பா ணத்தில் நாகராசா அலெக்ஸ் என்ற இளைஞர் பொலிஸாரின் மோசமான சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டு உயிரி ழந்துள்ளார். இதற்கு எதிராக ஜனாதி பதி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.” – என்றார்.

## நினைவேந்தும் உரித்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்ட அவர், தமிழ்த் தேசிய மாவீரர் நாள் நெருங்கியிருக்கும் இந்தக் காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசங்களில் அதிகரிக்கப்பட்டிருக்கும் இராணுவக் கெடுபிடிகள் குறித்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவரது உரையில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது:-

“2015 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட நிலைமாறுகால நீதிப் பொறிமுறையை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டதற்கமைய, ஈழத்தமிழர்கள், இனவிடுதலைக்காக உயிர்துறந்த தமது பிள்ளைகள் விதைக்கப்பட்ட விளைநிலங்களான துயிலும் இல்லங்களுக்குச் சென்று நினைவேந்தும் உரிமையை நிலைநிறுத்தத் தொடங்கியிருந்தார்கள். ஆனால், தமது உறவுகளை இழந்து துயருறுகின்ற நெஞ்சம் எவ்வாறு இருக்கும் என்பதை உணரத் தலைப்படாத அதிகாரக் கரங்கள், அடிப்படை மனிதாபிமான உணர்வுகளைக்கூடப் புறந்தள்ளி இன்னுமின்னும் எங்கள் மக்களை வஞ்சிக்கும் செயற்பாட்டையே மிகக் கச்சிதமாக மேற்கொண்டு வருகின்றன.

இனி ஒருபோதும் போரொன்றை விரும்பாத எமது மக்கள், பயங்கரவாதம் எனப்படுகின்ற இயல்புகளுக்கு ஒத்திசையாத வகையில் தங்களின் பிள்ளைகளை, அவர்கள் புதைக்கப்பட்ட நிலங்களில் சென்று வழிபடுவதற்கும், விளக்கேற்றுவதற்கும், கண்ணீர்விட்டு அழுவதற்குமான சந்தர்ப்பங்களைத் தடுக்கும் வகையில் அச்சுறுத்தல்களும், விசாரணைகளும் பரவலாக அரங்கேற்றப்படுகின்றன.

போர் முடிவுற்று பதின்மூன்று ஆண்டுகள் நிரம்பிய பின்னரும், வடக்கு, கிழக்கிலுள்ள 27 மாவீரர் துயிலும் இல்லங்களில், யாழ்ப்பாண மாவட்டத்தின் கொடிகாமம், எள்ளங்குளம், கோப்பாய் ஆகிய துயிலும் இல்லங்கள், கிளிநொச்சி மாவட்டத்தின் தேராவில் துயிலும் இல்லம், முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை, ஆலங்குளம், அளம்பில், நெடுங்கேணி களிக்காடு, மற்றும் மணலாறிலுள்ள உதயபீடம், கோடாலிக்கல் புனிதபூமி ஆகிய துயிலும் இல்லங்கள், வவுனியா ஈச்சங்குளம் துயிலும் இல்லம், மட்டக்களப்பு தாண்டியடி துயிலும் இல்லம் ஆகிய பன்னிரண்டு மாவீரர் துயிலும் இல்லங்கள் இன்றுவரை இராணுவப் படை முகாம்களாக முற்றுகையிடப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தின் தேராவில் துயிலும் இல்லத்தை விடுவிக்கக் கோரி கடந்த 2023.11.11 ஆம் திகதி பொதுமக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் ஏற்பாட்டில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு சூழலில், தமது பிள்ளைகளின் கல்லறைகள் அத்தனையும் போரியல் மாண்புக்குப் புறம்பான வகையில் இடித்தும், பெயர்த்தும் அழிக்கப்பட்ட பின்னரும், அந்தக் கல்லறைகள் நிறைந்திருந்த துயிலும் இல்லங்களைத் தமது புனிதபூமியாக எண்ணியே தமிழர்கள் இன்றளவும் பூசிக்கிறார்கள். திரும்பும் திசையெல்லாம் ஆக்கிரமிப்பின் கால்கள் ஆழ வேரூன்றிப் போயிருக்கும் தமிழர் தாயகத்தில், இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட துயிலும் இல்லங்கள் மீதான ஆக்கிரமிப்பும், வழிபாட்டுரிமை மீதான தடையும் மீளவும் வலிந்து ஏற்படுத்தப்படக் கூடும் என்ற அடிப்படையில், மக்களிடையே ஆழப்பதிந்திருக்கும் அரசு மீதான நம்பிக்கையீனமும், துயிலும் இல்லத்தின் புனிதத்துவத்தைப் பாதுகாக்க வேண்டுமென்பதில் அவர்களுக்கிருக்கும் ஆத்ம எதிர்பார்ப்பும், அத்துயிலும் இல்லவளாகங்களை எல்லைப்படுத்துவதிலும் அலங்கரிப்பதிலும் ஆர்வத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அத்தகைய மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய, காலத்தின் தேவை கருதியும் துயிலும் இல்ல மரபுகளுக்கமையவும் கனகபுரம், முழங்காவில், வன்னிவிளாங்குளம் ஆகிய மூன்று துயிலும் இல்லங்களினதும் நுழைவாயில் முகப்புகளை, அரை நிரந்தரமானவையாக நிறுவியிருக்கிறோம். எமக்கெதிராக அரசு பூசமுற்படுகின்ற பயங்கரவாத முலாம் குறித்த எந்தக் குறியீடுகளும் அவற்றில் காட்சிப்படுத்தப்படவில்லை. ஆனால் போரை நினைவுபடுத்துகின்ற, நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கின்ற எந்தவொரு அடையாளங்களும் இல்லாத வெற்று முகப்புகளை நிறுவியமைக்காக, இதுவரை நான் உட்பட பதின்மூன்று பேர் பொலிசாரால் தனித்தனியே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளோம்.

தமிழர்களின் பூர்வீக மண்ணை ஆக்கிரமித்து, நூறு வீதம் தமிழ் மக்களின் புழக்கம் செறிவாக உள்ள தமிழர் தாயகப் பகுதிகளின் பெருநகரங்களிலும், பிரதான வீதிகளிலும் ஏராளமான போர் வெற்றிச் சின்னங்கள் நிரந்தரமாக நிறுவப்பட்டுள்ளன. குறிப்பாக கிளிநொச்சி நகர மத்தியில், டிப்போச்சந்திக்கும் கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்துக்கும் அருகேயுள்ள சந்திரன் பூங்கா வளாகத்தில், தமிழர்களின் இதயங்களைத் துளைத்து உள்நுழைவதான தோற்றப்பாட்டை வெளிப்படுத்தும், துப்பாக்கிச் சன்னம் ஒன்றுடனான போர் வெற்றிச் சின்னமும், ஆனையிறவுப் பகுதியில் ஏ - 9 பிரதான வீதியின் இருமருங்கும், இருவேறு போர் வெற்றிச் சின்னங்கள் நிறுவப்பட்டுள்ளன. இலங்கையைத் தாங்கி நிற்கும் வலிந்த கரங்கள் ஒருபுறமும், இராணுவச் சிப்பாய் ஒருவரின் இராணுவச் சீருடையுடனான உருவச்சிலை ஒருபுறமும் நிறுவப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் ஏ - 35 பிரதான வீதியின் ஒருமருங்கில், ஆயுதம் தரித்த இராணுவச் சீருடை, சிங்கக்கொடி, துப்பாக்கி என்பவற்றை ஏந்தியவாறு வெற்றிக்களிப்பில் மிதக்கும் இராணுவச் சிப்பாய் ஒருவரது உருவச்சிலை நிறுவப்பட்டிருக்கிறது.

அடிப்படை உரித்துக்கோரிப் போராடிய ஒரு இனத்தைத் தோற்கடித்துவிட்டோம் என்கிற மமதையையும், போரின் குரூரத்தையும், படையினரது ஆக்கிரமிப்புச் சிந்தையையும் முகத்திலறைந்தாற்போல் பிரதிபலிக்கும் ஆயுத கலாசார நினைவுச்சின்னங்கள் சீர்குலைக்காத இன நல்லிணக்கத்தை, அவை நினைவுபடுத்தாத போரியல் உணர்வுகளை, நினைவேந்தல் உரித்தை நிலைநாட்டுவதற்காக அமைத்த துயிலும் இல்ல முகப்புகள் சீர்குலைக்கும் என்று சிந்திப்பதுகூட ஆக்கிரமிப்பின் அதியுச்ச வெளிப்பாடாகவே தென்படுகின்றது.” - என்றார்.

இதன்போது தேராவில் துயிலும் இல்ல விடுவிப்புத் தொடர்பான ஆர்ப்பாட்டத்தின் போது கையளிக்கப்பட்ட மகஜரின் பிரதியும், புதிதாக நிறுவப்பட்டுள்ள துயிலும் இல்லமுகப்பின்நிழற்படமும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள இராணுவ நினைவுச் சின்னங்களின் புகைப்படங்களும் சபாபீடத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதோடு நாடாளுமன்றிலும் காட்சிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கார்த்திகை வாசத்தில் தாவராவததானி போட்டி

### நாளை சங்கிலியன் பூங்காவில்

“இயற்கை எனது நண்பன்“ தலைப்பில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நாளை 26ஆம் திகதி தாவரங்களை அடையாளம் காணும் தாவராவததானி போட்டி நடைபெறவிருக்கின்றது.

போர்க் காலத்திற் கூட இயற்கை எனது நண்பன் என்று இயற்கையை நேசித்த தமிழர் வாழ்வியல் இன்று இயற்கையில் இருந்து விலகிச் சென்று கொண்டிருக்கிறது. இதுவே இன்றைய சுற்றுச் சூழல் பிரச்சினைகளுக்கெல்லாம் மூல காரணம். இதனைக் கருத்திற் கொண்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இயற்கையை நேசிக்கக் கற்றுக் கொடுக்கும் வகையில் தாவரங்களை அடையாளம் காணும் தாவராவததானி போட்டி ஒன்றை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கார்த்திகை வாசம் மலர்க் கண்காட்சியில் 26ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடாத்த உள்ளது.

தாவராவததானி போட்டியில் பால், வயது வேறுபாடின்றி முன் பதிவு இல்லாமல் எவரும் கலந்து கொள்ளமுடியும் எனவும், போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு தாவராவததானி சான்றிதழோடு பரிசுகளும் வழங்கப்படும் எனவும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் அறிவித்துள்ளது.

## விசேட ஸ்கானர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கருத்துத் தெரிவிக்கையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இன்றைய (நேற்றைய) அகழ்வின் போது நான்கு மனித எலும்புக்கூடுகளின் எச்சங்கள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டன. அத்துடன் துப்பாக்கிச் சன்னங்களும், குண்டுச் சிதறல்களும் மீட்கப்பட்டன. பேனா மாக்கர் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டது.

இன்று (நேற்று) விசேட ஸ்கானர் மூலம் இந்தப் புதைகுழி எவ்வளவு தூரம் பரந்து வியாபித்துள்ளது எனப் பரிசோதனை செய்யப்பட்டது. இதன் முடிவுகள் நாளை (இன்று) அகழ்வுப் பரிசோதனை நிறைவுற்றதன் பிற்பாடே கிடைக்கப்பெறும்.

இந்தமனிதப்புதைகுழியானதுவீதியின் ஊடாகவும் மற்றைய பகுதிகள் ஊடாகவும் செல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. எனினும் நாளைய (இன்றைய) பரிசோதனையின் பின்னரே இறுதி முடிவுகளை எம்மால் உறுதியாகக் கூற முடியும்.” - என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ரணிலின் வீண் வேலை!

முன்னைய ஜனாதிபதிகள் எல்லோருக்கும் முற்றிலும் மாறாக நடந்து கொள்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

முன்னைய ஜனாதிபதிகள் தாங்கள் ஜனாதிபதியாகப் பணியாற்றிய காலங்களில் அடிக்கடி நாடாளுமன்ற அமர்வுகளில் வந்து பங்கேற்பதில்லை. அவர்களுக்கு அச்சமயங்களில் நிறைவேற்றதிகார ஜனாதிபதி என்ற முறையில் அதிக வேலை பளு இருந்ததோ என்னவோ. அவர்கள் இவரை போல - ரணில் விக்கிரமசிங்க மாதிரி - நாடாளுமன்றத்திற்கு எந்நேரமும் பிரசன்னம் தருவதில்லை.

ரணில் விக்கிரமசிங்க சுமார் 45 வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தமையாலோ என்னவோ அந்த நாடாளுமன்ற ஆசனத்தில் வந்து அமர்ந்து எம்.பிக்களுடன் வாக்கு வாதப்படாவிட்டால் அவருக்கு சுகப்படுவதில்லைப் போலும்.

அடிக்கடி நாடாளுமன்றுக்கு வருகிறார். புதுப்புது அறிவிப்புக்கள், அறிக்கைகளை வெளியிட்டு, ஏதேனும் குழப்பங்கள், குசும்புகளை வெளிப்படுத்தி வருகின்றார். அந்த நாடாளுமன்ற பேச்சுக்களில் தப்பும் தவறுமாகக் கருத்துக்களை வெளியிட்டு வாங்கிக் கட்டவும் அவர் தவறுவதில்லை.

அரசமைப்புக் கவுன்ஸில் சபாநாயகரின் தலைமையில் இயங்குவது. சட்டமாக்கல் துறையான நாடாளுமன்றத்தின் ஓர் அங்கம்தான் அது. அத்தகைய நாடாளுமன்றக் கவுன்ஸில் தனது நிறைவேற்றதிகாரத்தின் கீழ் என்ற சாரப்பட ஒரு கருத்தை வெளியிட்டு, எம்.பிக்களிடம் வாங்கிக் கட்டுகிறார்.

கடந்த இரண்டு, மூன்று நாள்களாக நாடாளுமன்றத்திற்குத் திடீர், திடீரென வந்து அறிவிப்புகளைகொளுத்திப் போடும் அவர், போகின்ற போக்கில் ஒரு கோமாளியாக (ஜோக்கராக) பார்க்கப்படும் நிலைமை ஏற்பட்டாலும் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

அவர் தப்பும் தவறுமாக விடயங்களை முன்வைக்கின்றார் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் வைகிறார்.

விடயம் புரியாமல் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் ஏதேதோ பேசுகிறார் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸா ஒரு புறம் வாங்குவாங்கு என்று வாங்கித் தள்ளுகிறார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதிப் பதவியை விட்டு வெளியேறும் காலகட்டத்தில், தமது சுயநல பதவி ஆசைக்காக இடையில் புகுந்து விளையாடி அரசியலில் சின்னத்தனம் பண்ணினார் ரணில் விக்கிரமசிங்க என்ற விவரம் வெளியானமையை அடுத்து நாடாளுமன்றத்தில் என்ன பேசுகின்றோம், ஏது செய்கின்றோம் என்று தெரியாமல் விட்டேத்தியாக நடக்கிறார் ரணில்.

இந்த விவகாரங்களை ஒட்டி நேற்றுப் பிற்பகல் சபையில் விசேட கூற்று ஒன்றை முன்வைத்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டை விட்டு கோட்டாபய ராஜபக்ஷ வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட சமயத்தில், இடையில் சமாதானத் திட்டம் ஒன்றை இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் முன்வைத்த அதன் முன்னாள் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ்க்கு அவரே பிரதமராகும் திட்டமிருந்தது என்று கூறி குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றார் அவர்.

ஜனாதிபதி கூறுவது முற்றிலும் பொய், ஆதாரம் ஏதும் அற்றது, அடிப்படை அற்றது என சாலிய பீரிஸ் மறுத்துரைத்திருக்கின்றார்.

அடிக்கடி நாடாளுமன்றுக்கு வந்து, தேவையில்லாத விடயங்களில் எல்லாம் வாயைக் கொடுத்து, வாங்கிக் கட்டிக் கொள்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இது தேவைதானா?

# ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட பொலிஸ் அலுவலர் சடலமாக மீட்பு

ஜா-எல பகுதியில் வைத்து ஆற்றில் அடித்து செல்லப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் தப்பிச்சென்றுள்ளார். இந்த நிலையில், அவரைப் பிடிக்கும் முயற்சியின் போது அந்த பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று ஜா-எல பகுதியில் உள்ள ஆற்றில் அடித்துச்செல்லப்பட்டார்.

பொலிஸ் உயிர் பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் மற்றும் கடற்படை சுழியோடிகள் இணைந்து அவர்சித் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தநிலையில், நேற்று அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் யாழ்ப்பாணம் – சாவகச்சேரியை சேர்ந்த 26 வயதுடையவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2023

“தன்னால் அந்த மரத்தின் நிழலில் ஒருபோதும் உடக்காரமுடியாது என்று தெரிந்தும் மரங்களை நாட்டும் முதியவர்களைக் கொண்ட சமூகம் மிகப் பாரியளவில் வளர்ச்சியடையும்.”

- கிரேக்கப் பழமொழி



## உத்தராகண்ட் சுரங்க விபத்து:

# தொழிலாளர்களை நெருங்க 15 மீற்றர் மட்டுமே உள்ளது!

உத்தராகண்ட் சுரங்கப் பாதையில் சிக்கியுள்ள 41 கட்டுமானத் தொழிலாளர்களை மீட்க 14 ஆவது நாளாக பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், அவர்களை நெருங்க இன்னும் 15 மீற்றர் துளையிடும் பணி மட்டுமே எஞ்சியுள்ளது என்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

உத்தரகாண்ட் சுரங்கப் பாதையில் சிக்கியுள்ள 41 கட்டுமானத் தொழிலாளர்களை மீட்கும் பணியில் எதிர்பாராத தடைகளால் பணி தாமதமாகி வருகிறது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இடிபாடுகளுக்குள் 800 மில்லி மீற்றர் விட்டம் கொண்ட குழாய் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, அதன்வழியாக, உள்ளே சிக்கி இருப்பவர்களை வெளியே அழைத்து வருவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தக் குழாய் வழியாக அவர்களே தவழ்ந்து வருவார்கள் என கூறப்பட்ட நிலையில், தற்போது சக்கரங்கள் பொறுத்தப்பட்ட ஸ்ட்ரெச்சர்கள் மூலம் அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான ஒத்திகை நேற்று மேற்கொண்டது.



அமெரிக்க 'ஆகர்' இயந்திரத்தில் நேற்று தொழில்நுட்பக் கோளாறால் துளையிடும் பணி தாமதமானதாக தகவல் வெளியானது. அந்த இயந்திரம் சரி செய்யப்பட்டதாகவும், ஆனால் பணி தொடங்க சற்று நேரம் ஆகலாம் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. எனினும், விரைவில் மீட்புப் பணிகள் மீண்டும் தீவிரம் அடையும் என்று அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

தொழிலாளர்களை மீட்க இன்னும் 15 மீற்றர் துளையிடும் பணி மட்டுமே எஞ்சியுள்ளது. 'இந்தியாவின் மகன்களை' காப்பாற்ற மாநில மற்றும் மத்திய அரசுகள் ஒத்துழைத்து வருகின்றன என தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் எனத் தெரிவித்துள்ளது. உத்தரகாண்ட் முதல்வர் பி.எஸ்.தாமி, சுரங்கப்பாதை மீட்புப் பணியை ஆய்வு செய்தார். அதன் பிறகு மீட்புப் பணியின் கடைசிக் கட்டப் பணியை வேகமாகவும், முழு எச்சரிக்கையுடனும் மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இதனிடையே, சுரங்கத்துக்குள் சிக்கியிருக்கும் 41 தொழிலாளர்களின் மன அழுத்தங்களைப் போக்குவதற்காக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து மருத்துவர்கள் விவரித்துள்ளனர். இது குறித்து மீட்புப் பணிகள் நடை பெறும் இடத்தில் இருக்கும் மனநல மருத்துவர்களில் ஒருவரான வைத்தியர் ரோகித் கோண்ட்வால் கூறுகையில்,

"உள்ளே இருக்கும் தொழிலாளர்களின் மன அழுத்தத்தை போக்க நாங்கள் அவர்களுக்கு லுடோ, செஸ் மற்றும் சீட்டுக் கட்டுகளை வழங்க முடிவு செய்தோம். பல்வேறு காரணங்களால் மீட்புப் பணிகள் தாமதமாகி வருகின்றன. உள்ளே இருப்பவர்கள் தங்களின் மன அழுத்தத்தைப் போக்க திருடன் – பொலிஸ் விளையாட்டு விளையாடுகின்றனர். யோகா செய்வதாகவும் எங்களிடம் கூறினர்" என்று தெரிவித்தார்.

# மும்பை விமான நிலையத்துக்கு வெடி குண்டு மிரட்டல்!

இந்தியாவின் மும்பை விமான நிலையத்துக்கு வெடி குண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

மும்பை சத்ரபதி சிவாஜி சர்வதேச விமான நிலையத்திற்கு ஒரு மின்னஞ்சல் வந்துள்ளது.

அதில் விமான நிலையத்தின் ஒரு பகுதியை குண்டு வைத்து தகர்க்க போவதாகவும், 48 மணி நேரத்திற்குள் 1 மில்லியன் அமெரிக்க டொலர்களை தரவேண்டும் எனவும் அந்த மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதுகுறித்து, விமான நிலைய அதிகாரி ஒருவர் சஹார் பொலிஸ் நிலையத்தை அணுகி, மின்னஞ்சல் அனுப்பிய நபர் மீது முறைப்பாடளித்திருந்தார்.



இதன்படி, சந்தேகநபர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# த.மா.கா. எந்த கூட்டணியிலும் இல்லை: ஜி.கே.வாசன் அறிவிப்பு



தமிழ் மாநில காங்கிரஸ் தற்போது எந்த கூட்டணியிலும் இல்லை. கூட்டணி குறித்து ஜனவரி இறுதியில் அறிவிப்போம் என்று கட்சியின்தலைவர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல்லில் ஊடகவியலாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்.

"மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, மாநிலம் முழுவதும் பயணம் மேற்கொண்டு, நிர்வாகிகளை சந்தித்துப் பேசி, கட்சியை பலப்படுத்தி வருகிறேன்.

தை மாதம் பிறந்த பிறகு, கட்சி நிர்வாகிகள், தொண்டர்களின் கருத்துகளைக் கேட்க உள்ளேன். அவர்கள் வாக்காளர்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பார்கள். அதனடிப்படையில் கூட்டணி குறித்து முடிவு செய்யப்படும்.

த.மா.கா. தற்போது எந்த கூட்டணியிலும் இல்லை. கூட்டணி குறித்து அதிகாரப்பூர்வமாக ஜனவரி மாத இறுதியில் அறிவிப்போம். தமிழகத்தில் மரியாதைக்குரிய கட்சியாக த.மா.கா. உள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

# சோமாலியாவில் வெள்ளப்பெருக்கு: 96 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு



சோமாலியாவில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 96 இற்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில் கடுமையான வெள்ளப்பெருக்கு காரணமாக, சோமாலியாவில் அவசர நிலையை அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கிருந்து வரும் தகவலின் படி, ஷபல்லே நதியில் ஏற்பட்ட வெள்ளத்தினால், பெலட்வைன் நகரம் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது.

இதனால், சோமாலிய எத்தியோப்பிய எல்லையில் இருக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் தங்களின் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

ஆபிரிக்க அமைப்பான அல் ஷபாப்புக்கும் சோமாலியா அரசு படைகளுக்கும் நடந்து வரும் மோதலால் கடுமையாக பாதிக்கப்பட்ட மக்கள், இந்த வெள்ளத்தினாலும் கடுமையான பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரையிலும் 2 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

# மீண்டும் மன்னர் ஆட்சி கோரி போராட்டம்: பாதுகாப்பை பலப்படுத்தியது நேபாள அரசு

நேபாளத்தில் மீண்டும் மன்னராட்சி கோரி நடைபெற்ற போராட்டம் வன்முறையில் முடிந்ததை அடுத்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

நேபாளத்தில் மன்னர் ஆட்சி இருந்த நிலையில், கடந்த 2008 ஆம் ஆண்டு அது முடிவுக்கு வந்தது. இதையடுத்து, அங்கு ஜனநாயக முறைப்படி ஆட்சி நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், மீண்டும் மன்னராட்சி கோரி நேபாள தலைநகர் காத்மாண்டுவில் நேற்று முன்தினம் மாபெரும் போராட்டம் நடைபெற்றது. ஏராளமான மக்கள் ஒன்று கூடி போராடடத்தில் ஈடுபட்டதால், அங்கு வன்முறை வெடித்தது.



போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பேரணியாகச் சென்றபோது பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தியதால், போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கற்களைக்கொண்டு பொலிஸாரை தாக்கினர். பதிலுக்கு, தடியால் அடித்தும், நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டும் பொலிஸார் போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்தினர்.

இந்த நிலையில், மீண்டும் போராட்டம் வெடிக்காமல் தடுக்கும் நோக்கில் காத்மாண்டுவில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், உள்ளூர் நிர்வாகம் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

சில பகுதிகளில் மக்கள் ஒன்று கூடுவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. போராட்டத்தை முன்னின்று நடத்திய பிரபல தொழிலதிபர் துர்கா பிரசாய் என்பவரது வீடு அமைந்துள்ள காத்மாண்டுவின் பக்தாபூரில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். மேலும், பிரதமரின் வீடு, குடியரசுத் தலைவர் மாளிகை உள்ள இடங்களில் மக்கள் கூட தடை விதிக்கப்பட்டுள்ளது.

# காசாவின் எல்லைக்குள் நுழைந்த எரிவாயு வாகனங்கள்

காசாவின் எல்லைக்குள் எரிபொருள் மற்றும் எரிவாயு கொள்கலன்கள் தாங்கிய மூன்று வாகனங்கள் உள்நுழைந்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், எரிபொருள் மற்றும் எரிவாயு தாங்கிய வாகனங்கள் மேலும் சில நாட்களில் காசாவிற்கு செல்லவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காசாவில் இடம்பெற்ற தாக்குதல் காரணமாக எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால், அங்கு மருத்துவ சேவைகள் உள்ளிட்ட அடிப்படை சேவைகள் பாதிக்கப்பட்டு, பலர் உயிரிழந்தனர்.

இதன்காரணமாகவே, இந்த வாகனங்கள் காசாவிற்கு வருகைத்தந்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாகன விபத்தில் இளம் யுவதி சாவு

## தந்தை, தாய், சகோதரி படுகாயம்



தார் ஏற்றிச் சென்ற வாகனத்துடன் ஓட்டோ மோதி விபத்துக்குள்ளாகியதில் ஓட்டோவில் பயணித்த இளம் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார். அவரின் தந்தை, தந்தை மற்றும் சகோதரி ஆகியோர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து கலேவெல நகரில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறிபுர பகுதியைச் சேர்ந்த எஸ். எச். லோச்சனா காவ்யாஞ்சலி (வயது 20) எனும் யுவதியே உயிரிழந்துள்ளார்.

தெஹியத்தகண்டிய, சிறிபுர பிரதேசத்தில் இருந்து குருநாகல் பிரதேசத்தில் இடம்பெற்ற திருமண நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்காக ஓட்டோவில் சென்று கொண்டிருந்தபோதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

ஓட்டோ குருநாகல் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, கலேவெல நகரின் பிரதான வீதிக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப் வாகனம் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட வேளையில் பின்னால் வந்த தார் ஏற்றிச் சென்ற வாகனம் ஓட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த கப் வாகனத்தின் சாரதி மற்றும் தார் ஏற்றிச் சென்ற வாகனத்தின் சாரதி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையை கிராமிய மட்டத்தில் மேற்கொள்ளத் திட்டம்




போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் விசேட அதிகாரி ஒருவரை நியமிக்க தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனூடாக கிராமிய மட்டத்தில் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதாக சபையின் தலைவர் ஷாக்ய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தற்போது கிராமங்கள் தோறும் போதைப்பொருள் பாவனை சடுதியாக அதிகரித்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, நாடளாவிய ரீதியிலுள்ள 190 பிரதேச செயலக பிரிவுகளிலும் தலா ஒரு அதிகாரி வீதம் 190 அதிகாரிகளை போதைப்பொருள் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் மற்றும் சிரமங்களை எதிர்கொள்வோர், இது தொடர்பில் அந்த அதிகாரியிடம் அறிவித்து, போதைப்பொருள் பாவனையிலிருந்து விடுபடுவதற்கான அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ள முடியும் என ஷாக்ய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அத்துடன், கிராமத்தில் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை காணப்பட்டாலும் இந்த அதிகாரியை தொடர்புகொண்டு வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் ஷாக்ய நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.




# 2022 க.பொ.த. உயர்தர பரீட்சையின் மீள்திருத்தப் பெறுபேறுகள் வெளியீடு

2022 கல்வி பொது தராதர உயர்தர பரீட்சைகளின் மீள்திருத்த பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk ஊடாக அல்லது www.results.exams.gov.lk ஊடாக பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை மீள்திருத்தத்திற்கு 60 ஆயிரத்து 336 பரீட்சார்த்திகள் விண்ணப்பித்திருந்தனர் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.



# பாலியல் லஞ்சம் கோரிய சப் இன்ஸ்பெக்டர் கைது

கல்முனை பொலிஸ் நிலையத்தின் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாலியல் லஞ்சம் கோரிய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முறைப்பாட்டாளரான பெண்ணுக்கு எதிராக கல்முனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்தது.

வழக்கில் அவருக்கு சாதகமான மேலதிக அறிக்கைகளை தாக்கல் செய்வதற்கும், வாரம் ஒரு முறை பொலிஸ் நிலையத்திற்கு சென்று கையெழுத்திடுவது தொடர்பான நீதிமன்ற கட்டளையை மாதத்திற்கு ஒரு முறை என நீடிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாகக் கூறி சப் இன்ஸ்பெக்டரால் பாலியல் லஞ்சம் கோரப்பட்டுள்ளது.

இதற்கமைய, பாலியல் லஞ்சம் கோர முற்பட்ட போது, சப் இன்ஸ்பெக்டர் கல்முனையிலுள்ள விடுதி ஒன்றில் வைத்துத் தாங்கள் கைது செய்தனர் என லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினர் தெரிவித்தனர்.

சந்தேகநபரை சம்மாந்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச நாணய நிதிய கடன் தவணைக்கான இணக்கப்பாடு அடுத்த மாதத்தில் எட்டப்படும்

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு



கடன் தவணைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாடு அடுத்த மாதம் எட்டப்படும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கான அனைத்து முயற்சிகளும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றன என அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மத்திய வங்கியின் ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணைக் கடன் தொடர்பான பேச்சுக்களில் இலங்கை தற்போது முன்னேற்றம் அடைந்து வருகிறது என்றும் மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்தார்.

அதேநேரம், கொள்கை வட்டி வீதங்களை குறைத்ததன் பலனை வணிக வங்கிகள் மக்களுக்கு வழங்க வேண்டும் எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் வலியுறுத்தியுள்ளார்.




# வட.- கிழக்கில் பொலிஸாருக்கு தமிழ் கற்பிக்கும் வேலைத்திட்டம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழியை கற்பிக்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வரவு – செலவுத் திட்ட குழு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே நீதி அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

கடந்த 30 வருட யுத்த கால சூழ்நிலையின் போது, வடக்கில் எந்தவொரு இளைஞர்யு, வதிகளுக்கும் பொலிஸ் சேவையில் இணைந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

2016 ஆம் ஆண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழியை கற்பிக்கும் பல வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. ஆனால், அந்த வேலைத் திட்டங்கள் தொடர்ந்தும் செயற்படுத்தப்படவில்லை எனவும் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# இலங்கை மத்திய வங்கியினால் கொள்கை வட்டி வீதம் குறைப்பு


இலங்கை மத்திய வங்கி தனது கொள்கை வட்டி வீதத்தை ஒரு வீதத்தினால் குறைத்துள்ளது.

வணிக வங்கிகளில் சேமிப்பு கணக்குகளுக்கு அல்லது வழக்கமான வைப்புகளுக்கு மத்திய வங்கி வழங்கும் வட்டி 9 வீதமாக காணப்படுகின்றது.

இதனிடையே, மத்திய வங்கியினால் வழங்கப்படும் கடனுக்காக, வர்த்தக வங்கிகளில் அறவிடப்படும் வட்டி வீதம் 10 வீதமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கேற்ப வணிக வங்கிகளுக்கான வட்டி வீதமும் குறைக்கப்பட்டுள்ளது.

# தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்தின் நினைவுநாளும் புத்தக வெளியீடும்



பொதுவுடமை இயக்கத்தின் புரட்சிகர முன்னோடி தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் அவர்களின் 34 ஆவது விடைபெற்ற ஆண்டு நினைவு நாள் நாளை மறுதினம் (திங்களன்று) மாலை 3:00-5:00 மணிவரை சுழிபுரம் கே.ஏ.எஸ். சத்தியமனை நூலகத்தில் நினைவு கூரப்படவுள்ளது.

இந்நிகழ்வைத் தொடர்ந்து திருமதி. வள்ளியம்மை சுப்பிரமணியம் அவர்களின் "ஒரு கம்யூனிஸ்ட் இணையர் வாழ்வின் சந்திப்புகள்" நூல் வெளியீடும் கலந்துரையாடலும்,

"சிறுபொறி" சஞ்சிகையின் இரண்டாவது பொறி வெளியீடும், கே.ஏ.எஸ் சத்தியமனை நூலகத்தின் 2 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கே.ஏ.எஸ்.சத்தியமனை நூலக நிர்வாகத்தினர் அன்புடன் அழைக்கின்றனர்.




**உரலார் கேள்வி :- பட்டிமண்டபம் என்ற பெயர் சரியானதா? பட்டிமன்றம் என்ற பெயர் சரியானதா? தற்போதைய பட்டிமன்றங்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** பட்டிமண்டபம் என்பது ஒரு சொல். அதனைப் பட்டி, மண்டபம் என்று பிரித்தலாகாது. பட்டிமண்டபம் என்ற அச் சொல்லுக்கு “வித்தியாமண்டபம்” என்று அகராதியில் பொருளிட்டிருக்கிறார்கள். “வித்தியாமண்டபம்” என்றால் வித்தையை வெளிப்படுத்துகின்ற இடம் என்று பொருள். தர்க்கம் செய்வதன் மூலம் வித்தையை வெளிப்படுத்துவதால்தான் இத்தகைய அரங்கங்களுக்குப் பட்டிமண்டபம் என்று பெயரிட்டிருக்கிறார்கள். எனவே பட்டிமண்டபம் என்ற பெயர்தான் சரியானது என்று நினைக்கிறேன்.

நமது பழைய இலக்கியங்களிலும் பட்டிமண்டபம் என்ற பெயர்தான் பாவிக்கப்பட்டிருக்கிறது. திருவாசகத்திலும், மணிமேகலையிலும், கம்பனிலும் இந்நிகழ்வு பட்டிமண்டபம் என்ற பெயரால்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது.



பட்டிமண்டபங்களுக்கு இன்றைய வடிவினை உண்டாக்கிக் கொடுத்த காரைக்குடிக் கம்பன் கழகத்தின் ஸ்தாபகர் “கம்பன்அடிப்பொடி” சா.கணேசன் அவர்களும், தனது விழா அழைப்பிதழ்களில் பட்டிமண்டபம் என்ற பெயரையே பாவித்து வந்தார்கள். இன்றுவரை நாங்களும் எங்கள் கம்பன் விழா அழைப்பிதழ்களில் அந்தப் பெயரினையே பாவித்து வருகிறோம்.

தற்போது பரவலாகத் தொலைக்காட்சிகளிலும், வெளியிடங்களிலுமாக நடந்துவரும் விவாத அரங்கங்களுக்கு, பட்டிமண்டபம் என்ற பெயரினை இடாமல் விடுவது நல்லதென்றே படுகிறது. நம் நாட்டிற்கு என்று இல்லாமல் தமிழ் நாட்டுக்குமாகத்தான் இதனைச் சொல்கிறேன். ஏனென்றால், ஒரு காலத்தில் பட்டிமண்டபம் என்ற நிகழ்வு நுண்மையான ஒரு விடயத்தை, அறிஞர்கள் தம் ஆழமான வாதத்திறத்தால் உள்நுழைந்து தேடுவதாகவே அமைந்திருந்தது.

அதனால்தான் “எட்டினோடு இரண்டறியா எனைப் பட்டிமண்டபம் ஏற்றினை ஏற்றினை” என்றும் “பட்டிமண்டபம் பாங்கறிந்து ஏறுமின்” என்றும் பழைய புலவர்கள் பாடிவைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். இன்றைக்குப் பெரும்பாலும் பட்டிமண்டபங்கள் வெறும் நகைச்சுவை நிகழ்ச்சிகளாக மட்டுமே ஆகிவருகின்றன.

மாமனா? மச்சானா? கணவனா? மனைவியா? போன்ற விவாதங்களில் பேசுகிறவர்களுக்கு உலகியல் அறிவு மட்டும் போதுமானதாய் இருக்கிறது. கல்வியறிவு அங்கு தேவையற்றதாய்ப் போய்விடுகிறது. அந்த உலக அறிவில் “பழந்தின்று கொட்டை போட்ட“ வயதானவர்கள் எல்லாம் இருந்துகேட்க, தமக்கு வாய்த்த பேச்சுத்திறனை மட்டும் முதலாய் வைத்து, “முந்தநாள் பெய்த மழைக்கு நேற்று முளைத்த காளான்கள் “ எல்லாம் மேடையேறி அம் முதியவர்களுக்குப் புத்தி சொல்லத் தொடங்கிவிட்டன.

நகைச்சுவை ஒன்றே அத்தகையவர்களின் “கைச் சரக்காய்” இருக்கிறது. இன்று இயல் அரங்குகளில் அத்தகைய நகைச்சுவையாளர்களுக்குத்தான் மதிப்புக் கூடியிருக்கிறது. கேட்போரும் கவுண்டமணி, செந்தில், வடிவேலுவைப் போலத்தான் பேச்சாளர்களைப் பார்க்கத் தொடங்கி இருக்கிறார்கள்.

இதன் பாதிப்பால் இன்று அறிஞர்கள் கூட, சிறிதும் வெட்கம் இன்றி, தமக்குத்தாமே நகைச்சுவையாளர்கள் என்ற அர்த்தம் வரும்படியான பட்டங்களைச் சூட்டிக் கொள்கிறார்கள்.

உயர்ந்த சிந்தனைப் பேச்சாளர்களும், அத்தகைய நகைச்சுவைப் பேச்சாளர்களின் நிழலில் வாழத் தலைப்பட்டிருப்பது கற்றோர்க்கு வருத்தம் தருகிறது. கலியின் கொடுமை என்பதைவிட இதற்கு வேறு என்ன காரணத்தைச் சொல்வது?

பட்டிமண்டபங்களின் தரத்தைக் காக்கமுடியாவிட்டாலும், அவற்றின் “பிராண்ட் நேமையாவது” காக்கலாம் என்பதற்காகவே, அந்தப் பெயரையேனும் பாவிக்காமல் விடுவது நல்லதென்க

**(15ஆம் பக்கம் பார்க்க)**

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

ிறேன். நான் சொன்னால் மட்டும் கேட்கவா பே-ாகிறார்கள்?

**சல்லடையாரின் சலிப்பு :- "பேச்சாளர்கள் 'பவூன்ஸ்'ஆகலாமா?"**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி :- முத்தமிழில் எத்தமிழ் பெரியது என்று நினைக்கிறீர்கள் ?**

**உலக்கையார் பதில் :-** பத்து வருடங்களுக்கு முன்பு இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தீர்களானால், இயல் தமிழ்தான் பெரியது என்று அடித்துச் சொல்லியிருப்பேன். ஆனால் இப்போது எனது அக் கருத்து மாறிவிட்டது. இயல் தமிழைவிட, இசைத் தமிழ் மீதான எனது மதிப்பு நாளுக்குநாள் உயர்ந்து கொண்டே போகிறது. நம் அறிவால் இறை வனைத் தொடமுடியாது என்பது திண்ணம். ஆனால் உணர்வினால் இறைவனைச் சேரமுடி யும். அதனால்தான் நம் மாணிக்கவாசகர் "சொல் லிய பாட்டின் பொருள் அறிந்து சொல்லுவார்" என்று பாடாமல் "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்" என்று பாடினார்.

இயல் தமிழ் அறிவிற்கான கருவி. இசைத் தமிழ் உணர்விற்கான கருவி. அதனால்தான் இறை நோக்கிய விருப்பம் வளரவளர, இசை நோக்கிய விருப்பமும் வளர்ந்துகொண்டே போகிறது. இயல் தமிழ் கடவுள் பற்றி அறியச் செய்யும், இசைத் தமிழ் கடவுளை உணரச் செய்யும். அதனால்தான் இப்போது நான் கட்சி மாறிவிட்டேன். சந்தேகத் திற்கு இடமில்லாமல் தற்போது என் வாக்கு இசைத் தமிழுக்கேயாம்.

**சல்லடையாரின் சலிப்பு :- "இசைத்தமிழ் நீசெய்த அரும் சாதனை".....எப்பூபூபூடி?**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி :- தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு திருமலையில் நடைபெற இருக் கிறதாமே?**

**உலக்கையார் பதில் :-** தமிழரசுக் கட்சியின் தலை வர் பதவி அடுத்து யாருக்குப் போகப்போகிறது என்பதை, ஒரு வேளை இந்த மாநாடு தீர்மானிக்



கும் என்று எதிர்பார்க்கலாம். தற்போதைய கட்சி யின் தலைவர் "மாவை" நல்லவராய் இருக்க லாம். ஆனால் வல்லவர் இல்லை என்பது திண் ணம்!

மாவை அவர்கள் வெறும் வயது மூப்பினையே தனது தகுதியாய் வைத்திருக்கிறார். இதுவரை இப் பதவியை வைத்து இவர் செய்த சாதனை என்ன? என்ற கேள்விக்குப் பதில் ஏதும் இருப்பதாய்த் தெரியவில்லை.

நம் தலைவர்கள், ஈழத் தமிழர்களுக்குப் பழுதில்லாத இறந்த காலத்தையும் பெற்றுத் தரவில்லை. சிறப்பான எதிர்காலத்தையும் பெற்றுத் தருவார்கள் என்று தோன்றவில்லை.

தலைவருக்கான தகுதி இருக்கிறதா? என்று கேட்டால், இவர்கள் உடனே தமது இறந்த காலதியாக ஒப்பாரியைத் தொடங்கி விடுவார்கள். இவர்கள் போராடுகின்ற பதவிக் கதிரைகளில் அப்படி என்ன தான் காந்தம் இருக்கிறதோ? கடவுளுக்குத்தான் தெரியும்.

ஒருமாதிரியாக இவர்களை அந்தப் பதவிக் கதிரைகளில் இருந்து இழுத்துக் கழற்றி எடுத் தாலும் புதிதாய் வரப் போகிறவர்களும் அதில் ஒட்டிக் கொள்ளப் போவது மட்டும் நிச்சயம். இராமன் தனக்கு ஆட்சி வேண்டாம் என்றான். அதனால் தான் அவனுக்கு மதிப்பு வந்தது. அந்த மதிப்பு இனி யாருக்கும் வரும் என்று தோன்றவில்லை.

**சல்லடையாரின் சலிப்பு :- ஒட்டிக் கொண்ட வர்களை வெட்டி எடுத்தால்தான் உண் டுங்கோ.**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி :- பரத நாட்டியத்தை, பரத்தையரின் நாட்டியம் என்று கூறப்போய் வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கும் கிழக்கு மாகாண மௌலவி பற்றி என்ன நினைக் கிறீர்கள் ?**

**உலக்கையார் பதில் :-** வீணாகத் தன் மதிப்பை இழந்திருக்கிறார் இந்த மௌலவி! இதுபற்றிய கருத்தை அவரிடம் யார் கேட்டார்கள்? பரதம் பற்றி அவருக்கு என்னதான் தெரியும்? இன் னொரு சமூகம் சார்ந்த கலைபற்றிக் கருத்துத் தெரி விக்கையில் எவ்வளவு கவனம் செலுத்தியிருக்க வேண்டும்! அதைக்கூடத் தெரியாத இவர் எப்படி ஒரு மௌலவியாய்ச் செயலாற்றுகிறார் ?

ஊடகங்கள் பெருகிவிட்ட இக் காலத்தில், பிழை செய்தால் பெயரெடுத்துவிடலாம் என்ற ஒரு அவலம் நிகழத் தொடங்கியிருக்கிறது. நேற்று வரை யாரென்று தெரியாமல் இருந்த இந்த மௌலவி பிழையாகப் பேசிப் பிரபல்யம் அடைந்துவிட்டார். வெட்கக்கேடு!

தமது சமூகத்தின் மீதான ஒரு சிறு தூற்று தலைக்கூட இஸ்லாமியர்கள் தாங்கிக்கொள்ள மாட்டார்கள். இதனை இந்த மௌலவி அறிவார். அத்தகையவர் மற்றொரு சமூகத்தின் மீதான இத்தகைய தாக்குதல் கருத்தை எப்படி வெளியிட லாம்?

இந்த நாட்டிற்கு ஏதோ சாபம் நேர்ந்திருக் கிறதுபோல் தெரிகிறது. மதம் சார்ந்த, இனம் சார்ந்த பெரியவர்களுக்கு அன்பு வளர்க்கத் தெரியவில்லை. பகைவளர்க்க நன்றாகத் தெரிகிறது. நஞ்சான வார்த்தைகளைக் கொட்டிவிட்டு, மிக இலகுவாக மன்னிப்புக் கேட்டுத் தப்பிக்கப் பார்க்கிறார்கள். முன்பு ஒரு பாதிரியார், அடுத்து ஒரு பிக்கு. தற் போது ஒரு மௌலவி. இனிஎன்ன? யாராவது ஒரு ஐயரும் தொடங்க வேண்டியதுதான். பகைப்போட்டி நன்றாக நடக்கட்டும்.

**சல்லடையாரின் சலிப்பு :- வேதம் ஓதும் சைத்தான்கள். ஹி ஹி ஹி...!**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# இன்றைய ராசி பலன்கள் - 25.11.2023




உங்கள் மனதை கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளுங்கள்.இதனால் மன அழுத்தத்திலிருந்து விடுபடுவீர்கள்.

நீங்கள் செய்யும் பணியில் உங்களுக்கு திருப்தி இருக்காது. பணிச்சூழல் சிறப்பாக இருக்காது.

உங்கள் துணையுடன் தேவையில்லாத விவாதங் களில் ஈடுபடுவீர்கள். அவர் உங்களை தவிர்ப்பது போன்ற உணர்வு உங்களுக்கு ஏற்படும்.

இன்று குறைந்த அளவு பணம் காணப்படும். இன்று பெரிய அளவிலான முதலீட்டிற்கான முடிவுகளை எடுக்க வேண்டாம்.

மன அழுத்தத்தின் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




உங்களை மகிழ்ச்சியுடனும் ஆற்ற லுடனும் வைத்துக்கொள்ளுங்கள். அசௌகரியங்கள் காணப்படும். இன்று திருப்தி கிடைப்பது சற்று கடினமாக காணப்படும். அமைதியாக இருங்கள்.

பணியைப் பொறுத்தவரை நீங்கள் ஒரு சிறப்பான வாய்ப்பை இழப்பீர்கள். திறமையுடன் பணியாற்ற நீங்கள் உங்கள் பணிகளை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையினை சரியான முறையில் அணுகி விஷயங்களை சாதாரணமாக எடுத்துக் கொண்டால் சோர்வு மற்றும் அமைதியின்றி இருப்பதற்கு பதிலாக மகிழ்ச்சியாக இருக்கலாம்.

இன்றைய நிதிநிலை உங்கள் மனஅமைதியை கெடுக்கும். உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




இன்றைய நாள் சீராக இருக்கும். உங்கள் விருப்பங்களை நிறைவேற்று வீர்கள்.

உங்கள் திறமைகள் உங்கள் மேலதி காரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணிகளை மேலதிகாரிகள் தங்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டு பாராட்டுவார்கள்.

உங்கள் எண்ணங்களையும் கருத்துக்களையும் உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்வதற்கு இது ஒரு சாதகமான நாள். உங்கள் எதிர்கால வாழ்க்கைக்கான பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்

இன்று நிதிநிலை நன்றாக உள்ளது. நீங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று நாள் முழுவதும் ஆரோக்கியமாக காணப்படு வீர்கள். நல்ல தைரியத்துடன் காணப்படுவீர்கள்.




நீங்கள் உங்கள் எதிர்காலத்தைப் பற்றி கனவு காண்பீர்கள் மற்றும் சிந்திப் பீர்கள்.ஆனால் இன்று நீங்கள் சில முக் கிய நோக்கங்களைக் கொண்டிருப் பீர்கள்.

உங்கள் பணியில் மகிழ்ச்சி நிறைந்த ஆதாயம் காத்துக்கொண்டிருக்கின்றது. உங்களுக்கு கிடைக்கப்பெறும் அங்கீகாரத்தில் திருப்தி அடை வீர்கள்.

உங்கள் எண்ணங்களையும் கருத்துக்களையும் உங்கள் துணையுடன்பகிர்ந்து கொள்வதற்கு இது ஒரு சாதகமான நாள்.உங்களின் சமநிலையான அணுகுமுறை மூலம் இது சாத்தியம்.

இன்று உங்களுக்கு பணம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பணம் உங்களிடம் காணப்படும்.




இன்று மந்தமாக காணப்படுவீர்கள். ஆனால் தேவையான விஷயங்களை செய்வதில் விழிப்புடன் காணப்படு வீர்கள். உங்கள் நாளை கவனமாக திட்டமிடுங்கள்.

பணிகளைக் கையாள்வதை சற்று கடினமாக உணர்வீர்கள். பணியில் சில தவறுகளும் நேரலாம்.

உங்கள் மனதில் உள்ள குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன தேவையில்லாத விவாதங்களும் தவறான புரிந்துணரவும் காணப்படும்.இம்மாதிரி நிகழ்வுகளை தவிர்ப்பது உங்களுக்கு நல்லது.

பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாளவும்.

தலைவலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. தியா னம் செய்வதன் மூலம் மனஅழுத்தத்தைக் குறைக்கலாம்.




மனஅழுத்தம்காரணமாகசிலசௌகரி யங்களை இழப்பீர்கள். மகிழ்ச்சியு டன்இருக்க பாடல்களைக் கேளுங்கள் அல்லது திரைப்படங்களை பாருங்கள்.

வேலைகள் பெருகிக் காணப்படும். எனவே பணிகளை திட்டமிட்டு அதற் கேற்றவாறு ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையினை சரியான முறையில் அணுகி விஷயங்களை சாதாரணமாக எடுத்துக் கொண்டால் சோர்வு மற்றும் அமைதியின்றி இருப்பதற்கு பதிலாக மகிழ்ச்சியாக இருக்கலாம்.

இன்று தேவையான பணம் பெறுவதில் சிக்கல்கள் காணப்படுகின்றது. பணத்தைப் பொறுத்தவரை இன்று அதிர்ஷ்ட வாய்ப்பு கிடையாது.

தலைவலிக்கான வாய்ப்பு உள்ளது. உங்களை ரிலாக்ஸாக வைத்துக்கொள்ளுங்கள்.




உங்களுடைய அன்றாட பணி களை அதிர்ஷ்டவசமாக குறித்த நேரத் தில் செய்து முடிப்பீர்கள். உங்கள் முகத்தில் காணப்படும் உற்சாகம் பல ஆச்சரியங்களை ஏற்படுத்தும்.

உங்கள் பணித் திறமைக்கான பாராட்டைப் பெறுவீர்கள். புதிய வேலைவாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை பெற்றுத்தரும்.

உங்கள் துணையுடன் உண்மையாக நடந்து கொள் வீர்கள். இது அவருடனான நல்ல புரிந்துணர்விற்கு வழிவகுக்கும்.

இன்று உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். பணத்தை சேமிப்பதற்கான பல வாய்ப்புகள் காணப்படுகின்றன.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும் இன்று மகிழ்ச் சியுடன் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.




உங்கள் வளர்ச்சி இன்று அபாரமாக இருக்கும். இன்று பரந்த நோக்குடன் காணப்படுவீர்கள்.நீங்கள் சந்திக்கும் தடைகளை தகர்த்தெறிவீர்கள்.

நீங்கள் மிகுந்த சிரத்தையுடன் பணி யாற்றுவீர்கள். உங்களது இந்தப் போக்கின் காரணமாக பணிகளை விரைந்து முடிப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவையும் பாராட்டையும் பெறுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் விசுவாசமாக இருப்பீர் கள். இது நல்ல உறவை பராமரிக்க உதவும்.

இன்று பணவரவு அதிகமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பை நன்கு பராமரிக்கலாம்.

இன்று ஆரோக்கியத்துடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 25.11.2023




நீங்கள் நிகழ்வுகளை எளிதாக எடுத்துக் கொண்டால் இன்றைய நாள் நன்றாக அமையும். இன்று புதிய மனிதர்களுடன் கலந்துறவாடுவீர்கள். புதிய கூட்டாளிகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை மும்மரமாகச்செய்வீர்கள். பணிச்சுமை அதிகமாகக் காணப்படும். நீங்கள் சாமார்த்தியமாக அவற்றை கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படவும் விவாதங்கள் ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறையைக் கையாள வேண்டும்.

இன்று பண வரவிற்கான அதிர்ஷ்ட வாய்ப்பு குறைந்து காணப்படுகின்றது.




இன்று மிகவும் சிறப்பான நாள். பயணங்கள் வழியில் சில நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். நீங்கள் அந்த வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள். பணிநிமித்தமான பயணங்கள் ஏற்படலாம்.

உங்கள் கருத்துக்களை உங்கள் துணையுடன் பகிர்ந்துகொள்வதற்கு சிறப்பான நாள். உங்கள் துணையுடன் பயனுள்ள திட்டங்கள் பற்றி விவாதிப்பீர்கள்.

சில தடைகளைக் கடந்த பின் உங்களுக்கு பணம் கிடைக்கும். வெளி நாட்டிலிருந்து நீங்கள் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கும் பணம் உங்களுக்கு கிடைக்க வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




தேவையற்ற கவலைகள் காரணமாக சில சௌகரியங்களை இழப்பீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

பணிச்சுமை கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை நன்றாக திட்டமிட்டு நேராநேரத்தில் அவற்றை முடிக்க வேண்டும்.

உங்கள் மனதில் ஏற்பட்ட ஏமாற்றங்கள் காரணமாக உங்கள் துணையுடன் கடுமையான வார்த்தைகளை பேச நேரிடும். அவ்வாறு பேசுவதை தவிர்க்கவும்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படாது. இன்று வரவும்செலவும்இணைந்து காணப்படும். இதுஉங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

நன்மை தரும் விஷயங்களைப்பற்றி மட்டுமே நினையுங்கள். அது உங்கள் மனதை அனுகூலமாக வைத்திருக்கும்.




இன்றைய நாளின் முடிவில் நீங்கள் கவலையாக காணப்படுவீர்கள். ஆனால் உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்திக் கொண்டு ஆசுவாசத்துடன் இருங்கள்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப்படுவதால் சிறப்புடன் பணியாற்ற உகந்த நாள் அல்ல. சமயோஜித புத்தியுடன் பணியாற்றினால் வெற்றி கிடைக்கும்.

உங்களிடம் காணப்படும் மன அழுத்தத்தை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதை தவிர்ப்பது உங்களுக்கு நல்லது. நல்லவற்றையே நினையுங்கள்.

இன்று சேமிப்பதற்கு குறைந்த அளவு பணமே கிடைக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தலை வலிக்கான வாய்ப்புகள் உள்ளது.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

# அரசமைப்பு கவுன்ஸில் மீது நிறைவேற்றதிகாரம் அழுத்தத்தை பிரயோகிப்பதற்கு உரிமை இல்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

அரசமைப்பு கவுன்ஸில் மீது அழுத்தம் பிரயோகிக்க நிறைவேற்றதிகாரத்திற்கு உரிமை இல்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அரசமைப்புப் பேரவை தொடர்பில் ஆராய்வதற்காக தெரிவுக்குழுவொன்று ஸ்தாபிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் அறிவித்தார். நியமனங்களை அறிவிப்பதில் தொடர்ந்தும் தாமதம் நிலவுவதால், இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது என அவர் தெரிவித்தார்.



எனவே, அரசமைப்புக் கவுன்ஸில் தொடர்பில் ஆராய வேண்டிய தேவை காணப்படுவதாக அவர் கூறியிருந்தார்.

இந்த நிலையில், எதிர்க்கட்சித் தலைவரால் நேற்று அது தொடர்பில் கருத்து வெளியிடப்பட்டது.

நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவரால் அரசமைப்புக் கவுன்ஸில் தொடர்பில் ஆராய்வதற்கு தெரிவுக்குழுவொன்றை நியமிக்க அதிகாரம் உள்ளதா என எதிர்க்கட்சித் தலைவர் வினவினார்.

அத்துடன், அரசமைப்புக் கவுன்ஸில் மீது இவ்வாறு அழுத்தங்களை பிரயோகிக்க முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டினார்.



# அமெரிக்கத் தூதரகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஐவர் கைது

மின்சார பாவனையாளர்கள் சங்கத்தின் செயலாளர் சஞ்ஜீவ தம்மிக உள்ளிட்ட ஐவர் நேற்றுப் பிற்பகல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மக்கள் போராட்ட இயக்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டம், கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து பாலஸ்தீனத்திற்கு எதிராக முன்னெடுக்கும் ஆக்கிரமிப்பை நிறுத்துமாறு வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.



# இலங்கைக் கடற்பரப்பிற்கு அருகில் பயணிக்கும் கப்பல்களால் அதிக வருமானத்தை ஈட்ட முடியும்!

## இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவிப்பு



"இலங்கைக்க டற்பரப்பிற்கு அருகில் பயணிக்கும் கப்பல்கள் மூலம் நாட்டுக்கு வருடாந்தம் சுமார் 20 கோடி டொலர் வருமானம் ஈட்டும் வகையில் இலத்திரனியல் கடல்சார் விளக்கப்படங்களை உருவாக்க தேசிய நீரியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும்"

– இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நாடு பல சவால்களை எதிர்கொண்டிருந்த வேளையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எனக்குப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பதவியை வழங்கினார். இந்த நாட்டில் தேசிய பாதுகாப்பும் சட்டத்தின் ஆட்சியும் சீர்குலைந்துபோயிருந்தது. நாட்டு மக்கள் எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்காக வரிசையில் நின்று சோர்வடைந்தனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சரியான தலைமையின் கீழ் நாட்டின் நிலைமை இப்போது அன்றைய நிலையை விட சிறந்த நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. சரியான முடிவுகளால் நாட்டின் பொருளாதாரம் தற்போது வலுப்பெற்றுள்ளது.

நாட்டில் யுத்தம் இல்லை என்று கூறி தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதை நிறுத்த முடியாது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் நடந்தபோது ஒரு தேசமாக நாம் அந்தப் பாடத்தைக் கற்றுக் கொண்டோம். ஒரு நாட்டின் இராணுவம் முழுமையாக அந்நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டியுள்ளது. இனம், மதம், சாதி வேறுபாடின்றி ஒவ்வொரு பிரஜையினதும் பாதுகாப்பையும் உறுதி செய்ய இராணுவம் கடமைப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் வரவு – செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. உலகில் எந்த ஒரு நாடும் தனது நாட்டின் பாதுகாப்பிற்கே அதிக நிதியை ஒதுக்கிறது. ஆனால் சில அரசியல்வாதிகள் எமது நாட்டின் தேசிய பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்ட தொகை அதிகம் என்று கூறி நாட்டு மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

இம்முறை வரவு – செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்காக 423 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தளவு பாரிய தொகை முழுமையாக இராணுவத்திற்காகவே செலவிடப்படுவதாக சாதாரண மக்கள் நினைக்கின்றார்கள். இது ஒரு தவறான கருத்தாகும். இந்தக் கருத்தை நான் தெளிவுபடுத்த வேண்டும். பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருபத்தி மூன்று நிறுவனங்கள் உள்ளன. இவ்வாறு ஒதுக்கப்பட்டதில் 169 பில்லியன் ரூபா மாத்திரமே ஆயுதப்படைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. ஏனைய அனைத்து நிதிகளும், உதாரணமாக அனர்த்த முகாமைத்துவம், வானிலை போன்ற பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள ஏனைய நிறுவனங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

வளிமண்டலவியல் திணைக்களம், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம், அனர்த்த முகாமைத்துவப் பிரிவு, தேசிய மாணவர் படை மற்றும் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் போன்று கல்விக்காகவே ஒதுக்கப்பட்ட நிறுவனங்களும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ளன. அப்படியானால் இந்த அமைச்சின் வரவு – செலவுத் திட்டத்தில் இருந்து நேரடியாக பிள்ளைகளின் கல்விக்காக பெருமளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இது தவிர, இயற்கை அனர்த்தங்களால் பயிர் நிலங்கள் மற்றும் பொது மக்களின் சொத்துக்கள் அழிக்கப்படும் போது, பாதுகாப்பு அமைச்சின் மூலமே அவற்றுக்கான இழப்பீடுகளும் வழங்கப்படுகின்றன எனப்பதையும் நான் இங்கு குறிப்பிட வேண்டும்.

அதேபோன்று, பாதுகாப்பு அமைச்சின் மூலம் இந்நாடு பெற்றுக்கொள்ளும் வருமானத்தையும், அது தவிர்க்கும் பொருளாதார மற்றும் சமூக செலவுகளையும் பலர் புரிந்து கொள்வதில்லை. ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் படைக்கு எமது படைவீரர்களை அனுப்புவதன் மூலம் இந்நாடு பெரும் தொகையைப் பெறுகிறது.

ஜனாதிபதி இதனை விரிவுபடுத்துவதற்கு ஏற்கனவே பல்வேறு பாரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளார். கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகத்தில் சுமார் 250 வெளிநாட்டு மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். அதிலிருந்து நாட்டுக்கு வருமானம் கிடைப்பதோடு, உள்நாட்டு மாணவர்கள் வெளிநாடுகளுக்கு கல்வி கற்கச் செல்வதைக் குறைப்பதால், நாட்டில் அதிக அளவு அந்நியச் செலாவணி சேமிக்கப்படுகிறது என்பதையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

கப்பல்கள் துறைமுகத்திற்கு வந்தால்தான் இலங்கைக்கு வருமானம் கிடைக்கும் என பலர் நினைக்கின்றனர். ஆனால் அப்படியல்ல, இலங்கைக் கடலில் Sri Lankan Sea நம் நாடு அமைந்திருப்பதால், நம் நாட்டுக்கு அருகில் பயணம் செய்தாலும், எமக்கு வருமானம் ஈட்டக்கூடிய வழிமுறைகள் உள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் சுமார் நூற்றைத்தையாயிரம் கப்பல்கள் வரை நம் நாட்டின் கடல் எல்லை வழியாக பயணம் செய்கின்றன. இவற்றின் மூலம் வருமானம் பெற, நாம் மின்னணுப் பயண விளக்கப்படங்களை உருவாக்க வேண்டும். அந்தப் பொறுப்பை ஏற்று அந்தப் பணியைச் செய்ய நமது கடற்படை தயாராக உள்ளது. அதன் மூலம் அதிக வருமானம் பெறலாம். இதன் மூலம் நேரடி வருமானமாக சுமார் 20 கோடி டொலர்கள் வரை கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மறைமுக வருமானம் இன்னும் அதிகமாகும்."

– என்றார்.




# அலெக்ஸின் மரணம் தொடர்பான நேற்றைய நீதிமன்ற விசாரணை!

## நடந்தவை பற்றிய ஒரு தொகுப்பு



(நடராசா லோகதயாளன்)

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு உயிரிழந்த நா.அலெக்ஸின் மரணம் தொடர்பில் 5 பொலிஸாரைக் கைது செய்ய யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஆனந்தராஜா நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

நவம்பர் மாதம் 8ஆம் திகதி வட்டுக்கோட்டைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களில் ஒருவரான நாகராசா அலெக்ஸின் மரணம் இயற்கையானதா அன்றி மனித உயிர்ப் போக்கா எனக் கண்டறியும் நோக்கில் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையின்போதே நீதிவான் தனது கட்டளையின்போது இதனைக் குறிப்பிட்டார்.

இந்த வழக்கை யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரான டி.சி.விஜயக்கோன் தாக்கல் செய்து இந்த மரணம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை எனத் தெரிவித்தார். சட்ட வைத்திய அதிகாரியும் மரணம் தொடர்பில் ஏதும் குறிப்பிடவில்லை, காயமும் கடும் காயம் எனவும் குறிப்பிடவில்லை என்பதைத் தெரியப்படுத்தினார். உயிரிழந்தவரை பொலிஸார் 10ஆம் திகதி அராலியில் ஓர் ஆயுள்வேத வைத்தியரிடமும் அழைத்துச் சென்றுள்ளனர். இதேநேரம் 2023-11-11 அன்றே இவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பதிவேட்டில் உள்ளது என்றார்.

இதனையடுத்து சிறைக் காவலர்களான கந்தசாமி கமலதாஸ் மற்றும் ச.சத்தியமூர்த்தி ஆகியோர் சாட்சியம் அளித்தனர்.

இவற்றினையடுத்து 3ஆவது சாட்சியாக உயிரிழந்த நா.அலெக்ஸுடன் கைது செய்யப்பட்டு உடன் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுதாகரன் துவாகரன் சாட்சியமளித்தார்.

இவர் தனது சாட்சியத்தை ஆரம்பித்து சிறிது நேரத்தில் நிற்காமல் கூண்டில் அமர்ந்து இருந்து சாட்சியமளிக்க அனுமதிகோரி இருக்கையில் அமர்ந்து சாட்சியமளித்தார்.

துவாகரன் தனது சாட்சியத்தில் கூறியவற்றின் சாரம் வருமாறு:-

2023-11-08 அன்று நீல நிற ஓட்டோவில் எம்மைப் பொலிஸார் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையம் கொண்டு சென்று, அங்கு முன்னால் என்னை இருத்திவிட்டு அலெக்ஸை மட்டும் தனியாக உள்ளே அழைத்துச் சென்றனர். அவ்வாறு அலெக்ஸை உள்ளே அழைத்துச் சென்று சிறிது நேரத்தில் பலமாக அடித்துச் சத்தம் கேட்டதோடு அலெக்ஸ் "ஐயோ", "ஐயோ" எனப் பலமாக குளறும் சத்தம் கேட்டது. இவ்வாறு இரண்டரை மணிநேரம் தாக்கினர். அதன் பின்பு என்னை அழைத்துச் சென்று ஓர் அறையின் ஜன்னல் ஊடாக அலெக்ஸைக் காண்பித்து நீயும் உண்மையைக் கூறாது விட்டால் இப்படித்தான் தொங்குவாய் என்றனர்.

அதன்போது அலெக்ஸ் நீல நிறக் கயிற்றினால் கட்டித் தூக்கப்பட்டிருந்தார். என்னையும் சஞ்சீவன் என்னும் பொலிஸ் உத்தியோகத்தர் காலால் உதைத்து வீழ்த்தினார். அதன்போது கயிற்றினால் அடித்தனர். காலால் உதைத்தனர். அதன் பின்பு குந்தி இருக்கவிட்டு இருகாலையும் முன்னால் மடக்கி இழுக்க ஒருவர் முதுகில் ஏறி அமர்ந்துகொண்டார்.

இதனிடையே ஒரு பையை மணக்கத் தந்தனர். அதில் பெற்றோல் மணம் வீசியது. அதனையே அலெக்ஸின் முகத்தில் கட்டினர். பொலிஸ் நிலையத்துள் இடம்மாற்றி மாற்றி சித்திரவதை தொடர்ந்தது. – என்றார்.

இதன்போது சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறீக்காந்தா நீதிபதியின் ஊடாக "நீங்கள் ஏன் அமர்ந்து

தொடர்ச்சி ▼

# அலெக்ஸின் மரணம் தொடர்பான...

தொடர்ச்சி ▲

இருந்து சாட்சியளிக்கின்றீர்கள்?” எனக் கேட்ட போது “என்னையும் பொலிஸார் தாக்கியமையி னால் இன்றுவரை நிற்க, நடக்க இயலவில்லை” என சாட்சி பதிலளித்தார்.

இதன்போது சட்டத்தரணி க.சுகாஸ் நீதிபதியி டம், இந்த வழக்கின் முக்கிய சாட்சயான இவரின் பாதுகாப்புக் கருதி ஓர் பாதுகாப்பான இடத்தில் இவர் தங்க வைக்க அனுமதிக்கப்பட வேண்டும் எனக் கோரினார். அதனை ஆராய்ந்த நீதிபதி அதற்கு அனுமதிக்கப்படுகின்றது, எந்த இடம் என்பதனை முன் வையுங்கள், அனுமதி வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

இதனையடுத்து 3ஆம் சாட்சியின் வாக்கு மூலப் பதிவு நிறைவுற்ற சமயம் நீதிபதி 10 நிமி டம் மன்றை ஒத்தி வைத்தார். பின்னர் நீதிமன்றம் மீண்டும் கூடியது.

இதனையடுத்து 4ஆம் சாட்சியாக உயிரிழந்த அலெக்ஸிற்கு சிகிச்சையளித்த அராலி வடக்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஆயுள்வேத வைத்தி யர் செல்லத்துரை பரமசிவம் (வயது 74) அழைக்கப் பட்டார்.

ஆயுள்வேத வைத்தியரிடம் உயிரிழந்த அலெக்ஸை முன்னர் உங்களுக்குத் தெரியுமா எனக்கேட்டபோது, இல்லை எனப் பதிலளித்தார். அவர் தமது சாட்சியத்தை தொடர்கையில் கூறி யவை வருமாறு:-

2023-11-10 அன்று இரவு 9.15 மணியளவில் அலெக்ஸை என்னிடம் அழைத்து வந்தபோதே அவர் நடக்க இயலாமலேயே வந்தார். அதன் போது கையில் காயமும் சிறிய கம்பிக் காயங்க ளும் கை வீக்கமும் காணப்பட்டன. அதன்போதே நான் பொலிஸாரிடம் கை விலங்கு போட்டதால் இத்தகைய வீக்கம் ஏற்படாது எனக் குறிப்பிட்ட மையோடு, உடனடியாக அவரை வைத்திய சாலையில் அனுமதிக்குமாறு பொலிஸாரிடம் தெரிவித்தேன். இவ்வாறு நோயாளயைப் பார்வை யிட்டுக்கொண்டிருக்கும்போதும் அவர் வாந்தி யெடுத்தார். - எனத் தெரிவித்தார் ஆயுள் வைத்தி யர்.

அவரிடம் அலெக்ஸை அழைத்து வந்த பொலிஸா ரைத் தெரியுமா எனக் கேட்டபோது செல்வா மற்றும் பெரேரா ஆகிய இரு பொலிஸ் உத்தி யோகத்தர்களின் பெயரை அவர் வெளியிட்டார்.”

மூத்த சட்டத்தரணி என்.சிறீக்காந்தா நீதிமன்ற அனுமதியுடன் அவரிடம் கேள்வி எழுப்பினார்.

பொலிஸாரின் தடுப்பில் இருப்பவர்களை உங்களிடம் அழைத்து வருவார்களா, அலெக்ஸை அரச வைத்தியசாலையில் வைத்தியம் பெற பரிந்துரைக்கவில்லையா, பொலிஸில் தடுப்பில் இருப்பவரை பார்த்துப் பரிசோதிக்க உங்களிற்கு அனுமதி உண்டா என சாட்சியிடம் வினாவினார்.

இவற்றிற்கு பதிலளித்த ஆயுள்வேத வைத்தியர்-

இதற்கு முன்பு இப்படி அழைத்து வந்தமை கிடையாது. அதேநேரம் அழைத்து வந்தவுட னேயே நான் அவர்களிடம் கூறிவிட்டேன் அரச வைத்தியசாலைக்கு உடன் அழைத்துச் செல்லுமாறு. இருப்பினும் அழைத்து வந்த நேரம் இரவு 9.15 என்பதனால் மனிதாபிமான அடிப்படையில் பார்வையிட்டேன். - என சாட்சி தெரிவித்தார்.

இதனையடுத்து அரச சட்ட வைத்திய நிபுணரான மயூரதன் 5 ஆவது சாட்சியாக இது இயற்கை மரணமா அல்லது தண்டிக்கப்படவேண்டிய விதத் தில் விளைவிக்கப்பட்ட மரணமா என்ற அடிப்படையில் சாட்சியம் அளித்தார்.

அலெக்ஸ் இறந்த திகதி 2023-11-19. அவரை சிறைச்சாலையில இருந்து வைத்தியசாலைக்குக் கொண்டு வந்தபோது அவர் உயிரிழந்திருந்தார். இவரது உடற்கூற்று பரிசோதனை 2023-11-20 அன்றே இடம்பெற்றது. கைகள் செயலிழந்தமை யால் வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு 2023-11-12 இல் மல்லாகம் சட்ட வைத்திய அதிகாரி வழங்கிய சிபார்சிற்கமைய 2023-11-12 அன்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 2023-11-16 விடுவிக்கப் படும் சமயத்திலும் ஓர் உதவி சட்ட வைத்திய அதி காரி பார்வையிட்டிருந்தார்.

அலெக்ஸின் பிரேத பரிசோதனையின்போது பல காயங்கள், கண்டல்கள் காணப்பட்டன. தசையில் காணப்படும் கண்டல் காரணமாக மயோ பிளிஸ் என்னும் இரசாயனம் வெளியேறி, குருதி யுடன் கலந்து இந்த மரணம் ஏற்பட்டிருக்கலாம். இயற்கை மரணத்திற்கான காரணிகள் உடலின் உள்ளேயோ அல்லது வெளியிலோ வெற்றுக் கண்ணிற்கு தென்படவில்லை என்றார்.

அப்போது மன்றில் இதுவரையான சாட்சிகளின் பிரகாரம் அலெக்ஸ் தாக்கப்பட்டார் எனத் தகவல் கிடைத்துள்ளது, அதன் பிரகாரம் 19ஆம் திகதிய மரணம் ஏற்பட வாய்ப்பு உண்டா என நீதிபதி கோட்டார்.

இதற்கு பதிலளித்த சட்ட வைத்திய நிபுணர், “ஆம். இது காயத்தினால் ஏற்பட்ட விளைவு. அது 7 நாள் களிற்கு முன் ஏற்பட்ட காயமாகவே காணப்பட்டது. அதில நயிலோன் கயிற்றினால் பல மணிநேரம் தூக்கில் தொங்கியமையால் ஏற்பட்ட காயங்கள், கை, கால் மற்றும் பற்பகுதிகளில் அடி காயங்கள் காணப்பட்டன. வெற்றுக் கண்ணுக்கு இவை தெரிந் தாலும் விஞ்ஞான முடிவிற்காகவே இது ஓர் இயற்கை மரணம் அல்ல என எழுதி ஆய்விற்கு அனுப்பி அதன் முடிவு வந்த பின்பு காரணம் குறிப்பிடப்பட முடியும் என்றார் சட்ட வைத்திய நிபுணர்.

அவ்வாறானால் இது ஓர் ஆள் கொலையா என வினாவியபோது ஆம் என அவர் பதிலளித்தார்.

அது தடுப்புக் காவலில் இருந்து சித்திரவதை மரணமாகவிருக்கலாமா எனவும் வினாவப்பட்ட சமயம் ஆம் என அவர் பதிலளித்தார்.

இதன்போது சிரேஷ்ட சட்டத்தரணி சிறீக்காந்தா இன்றைய சாட்சிகளின் அடிப்படையில் பெயர் குறிப்பிடப்பட்ட 3 பொலிஸ் உத்தியோகத்தர்களையும் குற்றவியல் சட்டக் கோவைக்கேற்ப கைது செய்து ஆஜர் செய்யவும், அடையாளம் கூறியவர்களை அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தவும் உத்தரவிட வேண்டும் என மன்றை கோரினார்.

இவற்றை ஆராய்ந்த நீதிபதி இயற்கையா னது அன்றி ஏற்படுத்தப்பட்ட மனித உயிர்ப் போக் கிற்கு காரணமானவர்கள் என உடன் இருந்த சந்தேக நபரினால் பெயர் குறிப்பிடப்பட்டு, அடை யாளம் கூறப்பட்ட 3 பொலிஸரையும் கைது செய்யு மாறும், ஏனையோரைக் கைது செய்யும் வகையில் சாட்சியினால் கூறப்பட்ட அடையாளங்களை ஒத்தவர்களை இனம் காண்பதற்கு அடையாள அணவகுப்பு நடாத்த ஏற்பாட்டை மேற்கொள்ளுமாறு வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கான கட்டளையை நீதிமன்ற பதிவாளரை அனுப்பி வைக்குமாறு பணித்தார்.

உயிரிழந்தவருடன் உடன் இருந்த இரண்டாம் சந்தேக நபரும் 3ஆவது சாட்சியுமானவரை பொலிஸார் சில விடயங்களை இனம் காண அழைத்துச் செல்லக் கோருவதனால் இரு சட்டத் தரணிகளான க.சுகாஷ் மற்றும் மயூரன் சகி தம் அழைத்துச் செல்லவும் நீதிவான் கட்டளை யிட்டார்.

இந்த வழக்கில் உயிரி ழந்தவர் சார்பில் 12 பெண் சட்டத்தரணிகள் உட்பட 37 சட்டத்தரணிகள் ஆஜரா கினர்.

